# புது தில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எழுச்சி மிகுந்த விவசாயிகள் போராட்டத்திற்கு தொழிலாளர் அமைப்புகள் ஆதரவு தெரிவிக்க வேண்டி அழைப்பு

- **விவசாயிகள் விரோத மூன்று சட்டங்களையும் உடனே திரும்பப் பெறு !**
- **விவசாயிகள் மற்றும் தொழிலாளர் மீதான கார்ப்பரேட்டுகளின் ஆதிக்கத்தை எதிர்ப்போம் !**
- **விவசாயிகள் தொழிலாளர்கள் ஒற்றுமை ஓங்குக !**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விவசாயிகள் போராட்டத்திற்கு தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம். அவர்களுடைய கோரிக்கைகளை முழுமையாக ஆதரித்து குரல் கொடுக்கிறோம். போராடும் விவசாயிகளின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் திரண்டு இதுவரை இல்லாத அளவிற்கு ஒற்றுமையோடும் உறுதியோடும் வீரியத்தோடும் நடைபெறும் விவசாயிகளின் போராட்டம் ஒட்டுமொத்த நாட்டின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஆளும் கட்சி மற்றும் அரசின் ஒரு சில பிரிவினர் அறவழியில் போராடும் இந்த விவசாயிகளை பயங்கரவாதிகளாக தேச விரோதிகளாக சித்தரிக்க முயலுகின்றனர். ஆனால் அவர்களது இந்த முயற்சி பெருமளவில் எடுபடவில்லை. நாட்டிற்கே உணவளிக்கக்கூடிய இந்த விவசாயிகள் பெரும் எண்ணிக்கையில் தில்லியின் வீதிகளில் திரண்டிருக்கிற போது நாட்டில் வசிக்கும் அனைத்து மக்களும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு செவிசாய்ப்பதோடு அவற்றை முழுமையாக ஆதரிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் உள்ளது.

கொரோனா பெருந்தொற்று பெருமளவில் பரவிய சூழலில் 2020 ஆம் ஆண்டு ஜுன் 5 ஆம் நாள் இந்திய அரசு அவசரம் அவசரமாக மூன்று அவசர ஆணைகளைப் பிறப்பித்தது. விவசாயிகள் விளைபொருள் வணிகம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம் 2020, விலையுறுதி மற்றும் பண்ணை சேவைகள் (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2020, அத்தியாவசிய பொருட்கள் (திருத்த) சட்டம் 2020 ஆகிய மூன்று அவசர சட்டங்களை எந்தவொரு பாராளுமன்ற விவாதமும் இல்லாமல், இச்சட்டம் ஏற்படுத்தும் பாதிப்புகள் குறித்து விவசாயிகளின் பிரதிநிதிகளோடு எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்தாமல் செப்டம்பர் 2020-ல் இயற்றியது. நடுவண் அரசு இயற்றிய இந்தச் சட்டங்களும் விவசாயம் மீதான கொள்கையும் வேளாண்மை மீது பெரும் குழுமங்கள் ஆதிக்கம் செலுத்தும் வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக வேளாண் விளைபொருட்களை மிகக் குறைந்த விலைக்கு கார்ப்பரேட்டுகள் வாங்குவதற்கு அனுமதி அளிக்கும் வகையில் இச்சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

விவசாயிகள் விரோத இந்த மூன்று சட்டங்களையும் எந்தவொரு நிபந்தனையும் இன்றி மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால் அவர்களது கோரிக்கைகளுக்கு செவிமெடுக்காமல் விவசாயிகள் மீது அரசு போர் தொடுக்கிறது. விவசாயிகளை மிக மோசமாக சித்தரித்து அவர்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வேலையில் இறங்கியுள்ளது.

ஆனால் விவசாயிகளின் எழுச்சி மிக்க இந்தப் போராட்டம் ஒவ்வொரு நாளும் வலுப்பெற்று வருகிறது. சமூகத்தின் பல்வேறுதரப்பட்டோரின் மனசாட்சியையும் தட்டி எழுப்பி அவர்களுக்கு ஊக்கமாக இருந்து வருகிறது. பெருமளவிலான சிறு குறு விவசாயிகள் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். கிராமங்களில் இருக்கும் ஏழை எளியோர் தங்கள் வீடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான கி.மீ.களுக்கு அப்பால் தங்கள் குடும்பத்தைக் காப்பதற்காக வேலை தேடி சென்று மீண்டும் தங்கள் சொந்த ஊர்களுக்கு கொரோனா பெருந்தொற்று காலங்களில் திரும்பியக் காட்சியைக் கண்டோம். ஆயிரக்கணக்கான புலம் பெயர் தொழிலாளர்கள் நெடுஞ்சாலைகளில் கால்கடுக்க நடந்தே சென்ற சோகத்தை தேசிய ஊரடங்கு காலத்தில் நாம் கண்ணாரக் கண்டோம். எந்த வருமானமுமில்லாமல் தங்குவதற்கு இடமுமின்றி வேலையிழந்து நடந்து சென்ற காட்சிகள் இன்னும் நம் கண்முன்னே நிற்கின்றன.

அமைப்பு சாரா தொழிலாளர்களில் பெரும்பாலானோர் விவசாயம் பொய்த்துப் போனதால் அதற்கு பலியானோர். எந்த வேலையும் இல்லாமல் நிலமும் இல்லாமல் போதிய வாழ்வாதாரமின்றி வேலையைத் தேடி வருமானத்தை எதிர்பார்த்து கிராமப்புறங்களை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் இந்த ஏழைகளுக்கு இருந்தது. நகரங்களுக்கு அவர்கள் சென்ற போது அவர்களில் பெரும்பாலானோருக்கு குறைந்தபட்ச கூலி கூட கிடையாது. வேலைக்கு எந்த உத்திரவாதமின்றி, வேலைக்கான சட்ட பாதுகாப்பு மறுக்கப்பட்டச் சூழலில் இருப்பதைக் காண்கிறோம். வேளாண் சூழல் நெருக்கடியும் உயிர் வாழ்வதற்கான விவசாயிகளின் போராட்டமும் நமது போராட்டமுமாகும். எனவே தொழிலாளர்களும் விவசாயிகளும் கட்டாயம் இணைந்து போராட வேண்டும். நடுவண் அரசு இந்த ஆண்டு தொழிலாளர் சட்டங்களை சீர்திருத்துதல் என்ற பெயரில் நான்கு சட்டக் கோவைகளை (தொகுப்புகளை) இயற்றியுள்ளது. எல்லா அரசாங்களும் கண்டு கொள்ளாமல் புறக்கணிக்கும் 40 கோடி ஒருங்கிணைக்கப்படாதத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் இந்த சீர்திருத்தங்களில் இணைக்கப்படும் என்று முக்கிய வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. இந்த அமைப்பு சாரா தொழிலாளர்களிடையே உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள் எல்லாமே ஏமாற்றங்களாக மாறின. போலியான சட்டத் திருத்தங்கள் என்ற பெயரில் மீண்டும் மீண்டும் தாங்கள் ஏமாற்றப்பட்டதாகவே உணர்ந்தனர். இறுதியில் சந்தையே எல்லாவற்றையும் தீர்மானிக்கும் வகையில் உருவாக்கப்படுகிறது.

கொண்டு வரப்பட்டிருக்கும் வேளாண் சட்டங்கள் விவசாயத்தையும் தொழில் உற்பத்தியையும் பெரிய பெரிய கார்ப்பரேட்டுகளே கட்டுப்படுத்தும் வகையில் வழிவகை செய்வதைக் காண்கிறோம். இது போன்றப் கட்டுப்பாடுகள் விலைபொருட்களின் விலையை கார்ப்பரேட்டுகள் தீர்மானிக்க வழிவகை செய்வதோடு நிதிக் கட்டமைப்பு, சம்பளம், பொது நலவாழ்வு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் மீது கடுமையானத் தாக்குதல்களையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துகிறது. விவசாயிகளும் தொழிலாளர்களும் உற்பத்தியாளர்களாகவும் நுகர்வோர்களாகவும் இருக்கின்றனர். இது போன்றக் கட்டுப்பாடுகள் பெருவாரியான விவசாயிகளையும் தொழிலாளர்களையும் சொல்லொண்ணா துயரத்திற்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாக்குதோடு அனைத்து அதிகாரங்களும் ஒரு சில பெருங்குழுமங்கள் கைகளில் சிக்கிவிடும் அபாயம் உள்ளது.

எனவே வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வேளையில் அனைத்து ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர் அமைப்புகளும் இப்போராட்டத்தில் இணையுமாறு அழைப்பு விடுக்கிறோம். அனைத்திந்திய தொழிலாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுவோடு (AIWSCG) இணைந்து வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெற வலியுறுத்தும் விவசாயிகளின் போராட்டத்தில் பங்கெடுக்கும்படி அழைப்பு விடுக்கிறோம். விவசாயிகள் விரோத சட்டங்களை முற்றிலும் திரும்பப் பெற வலியுறுத்துவதோடு போராடும் விவசாயிகளோடு தோழமை தரவேண்டுமென்று இக்கூட்டுக் குழு சார்பாக ஒருமனதாக தீர்மானிக்கப்படுகிறது. அதோடு கூட நகர்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் வசிக்கும் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்களுக்கு உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்சக் கூலி, சமூகப் பாதுகாப்பு மற்றும் உரிய நேரத்தில் அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவது போன்ற கோரிக்கைகளையும் வலியுறுத்துகிறோம்.

வாழ்க தொழிலாளர்கள் !

வாழ்க விவசாயிகள் !

**Names of organisations and networks in alphabetical order :**

1. Asangathit Kaamgaar Adhikar Manch (AKAM),
2. Assam Mazdoor Union (AMU)
3. Asangathit Shramik Samajik Suraksha Manch (ASSSM)
4. Aravali Nirman Majdoor Suraksha Sangh (ANMSS)
5. Andhra Pradesh Domestic Workers Federation (APDWF)
6. Confederation of Free Trade Union (CFTUI)
7. Campaign against Camp Coolie System (CACCS)
8. Delhi Shramik Sangathan (DSS)
9. Dihari Mazdoor Sangathan (DMS)
10. GRAKOOS
11. Gruhakarmikula Union Telangana State (GUTS)
12. Hawkers Joint Action Committee (HJAC)
13. Hamal Panchayat
14. Indian Federation of App Based Transport Workers (IFAT)
15. KOOGU
16. Karkhana Shramik Suraksha Sangh (KSSS)
17. Kamgaar Ekta Union (KEU)
18. Lal Jhanda Punjab Bhatta Labour Union (LJPBLU)
19. Maharashtra Nirman Mazdoor Sangathan (MNMS)
20. Maharashtra Rajya Hamal Mapadi Mahamandal (MRHMM)
21. Maharashtra Kashtakari Sangharsh Mahasangh (MKSM)
22. Majoor Adhikar Manch (MAM)
23. Manrega Mazdoor Union (MMU)
24. New Trade Union Initiative (NTUI)

25. National Centre for Labour (NCL)
26. National Hawkers Federation (NHF)
27. National Domestic Workers Movement (NDWM)
28. National Campaign Committee on Central Legislation for Construction Workers (NCC-CCW)
29. National Solidarity Committee of Brick Kiln Workers ( NSCBKW)
30. National Campaign Committee for Eradication of Bonded Labour (NCCEBL)
31. National Workers Movement (NWM)
32. National Association of Street Vendors of India (NASVI)
33. National Campaign Committee for Rural Workers (NCCRW)
34. Patthar Gadhai Shramik Suraksha Sangh (PGSSS)
35. Rajasthan Asangathit Mazdoor Union (RAMU)
36. Rajasthan Mahila Kamgaar Union (RMKU)
37. Sarvahara Jan Andolan (SJA)
38. Shramik Adhikar Manch (SAM)
39. Trade Union Centre of India (TUCI)
40. Integrated Trade Union Federation (ITUF)
41. United Nurses Association (UNA)

Working Peoples' Charter Network (WPC)
**21 December 202**